24 மணி நேர
தொலைத்தொடர்பு
சேவைகளுக்கு

நம்பிக்கையான இடம்:

மிதுஷா
புதிய பஸ் நிலைய
கட்டடம்,
வவுனியா.

நான்கு

உதயன்

விலை ரூபா 5-00

முகவர் தபால்
தொலைத்தொடர்புகளுக்கு
நம்பிக்கையான

ஒரே இடம்:

மிதுஷா
ரயில் நிலைய வீதி,
வவுனியா

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 03 சனிக்கிழமை (16-04-1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 139

பெரும் படையெடுப்பு நடத்தப்படினும்

சுதந்திர வாழ்வை நிர்ணயிக்கும் ஆற்றலை பிரதிபலிக்கும் விதத்தில் இம்முறை மேதினம்

ஷெல்லுக்கு பலி

படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் குருநகரில் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டார். நான்கு பேர் காயம் அடைந்தனர்.

புத்தாண்டு தினமான வியாழன் இரவு இச்சம்பவம் இடம் பெற்றது

அன்ரன் மக்மினன் (வயது 22) என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார்.

மற்றும் எம். யோசேஸ்வரி (வயது 37) எஸ். செல்வநாயகம் (வயது 63) ராணி (வயது 47) தனேந்திரன் (வயது 9) ஆகியோர் காயமடைந்தனர். (இ-51)

றுகுணு; மாஹோ கப்பல்கள் பருத்தித்துறை வந்தன

பொருள் இறக்கும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 16

நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'றுகுணு', 'மாஹோ' கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் உடன் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வடக்கே புறப்பட்டு இடைவழியில் கொழும்புக்கு திருப்பி அழைக்கப்பட்ட 'றுகுணு' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படாமல் மீண்டும் வடக்கே வர அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இக்கப்பலில் உரம், மற்றும் யாழ். ஆஸ்பத்திரிக்கு ஒரு தொகுதி மருந்து வகைகள், மற்றும் மின்சார சபை ஊழியருக்கு 172 சைக்கிள்கள், இலங்கை கூட்டுத்தாபன ஊழியருக்கு 30 சைக்கிள்கள், தனியார் நிறுவனத்துக்கு 692 சைக்கிள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

'மாஹோ' கப்பலில் 4 ஆயிரத்து 550 பரல் மண்ணெண்ணெய் எடுத்து வரப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் தற்சமயம் பொருள் இறக்கிக் கொண்டிருக்கும் 'கோமாரி' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வரும் பட்சத்தில் 'றுகுணு' கப்பலில் இருந்து பொருள் இறக்கும் வேலைகள் நடைபெறமாட்டாது. (இ-3-9)

எழுச்சிமிகு நிகழ்ச்சிகளை நடத்த பொதுசன அமைப்புகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

பெரும் படையெடுப்பை நடத்தி தமிழீழ மக்களை, அவர்களின் வளங்களை அழித்துவிட ஸ்ரீலங்கா பேரினவாத அரசு திட்டமிட்டுள்ளது;

அதன் மத்தியிலும் சுதந்திரமான கௌரவமிக்க வாழ்நிலையை நிர்ணயிக்கும் ஆற்றல் தமிழீழ மக்களுக்கு உண்டு என்பதைப் பிரதிபலிக்கும் விதத்தில் இம்முறை மேதின நிகழ்வுகள் நடக்க இருக்கின்றன;

அதற்கேற்றவாறு நிகழ்வுகளை எழுச்சிமிகு வகையில் முன்னெடுக்க பொதுசன அமைப்புகள் தாமாகவே முன்வந்துள்ளன.

இத்தகவல்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் நடக்கவிருக்கும் மேதின நிகழ்வுகள் குறித்து அவர் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் இம்முறை நடக்கவிருக்கும் நிகழ்வுகளின் தன்மை குறித்து விவரித்துள்ளார்.

அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இவ்வருடத்தின் மே நாளை சிறப்பாக, எழுச்சியாக முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை வெகுஜன அமைப்புகளும், தொழிற்சங்கங்களும் அரச கூட்டுறவு, தனியார் துறையினரும் செய்து வருகின்றனர். கடந்த வார இறுதியில் எட்டிய தீர்மானங்களுக்கேற்ப செயற்படுவதற்கு வகுக்கப்பட்டுள்ளன.

மேநாள் எழுச்சியின் மேன்மையை வெளியிட பொருத்தமான கருத்தரங்குகள், கலை வடிவ ஏற்பாடுகளை வெகு

(3 ஆம் பக்கம் பார்க்க)

அடுத்த பொதுத் தேர்தலில் சிறிமானி போட்டியிடுவார்

கொழும்பு, ஏப். 16

அடுத்த நாடாளுமன்றத்தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க முதலி போட்டியிடுவாரென அறிவிக்கப்படுகிறது.

மறைந்த அமைச்சர் லலித் அதுலத் முதலியின் ஆதரவாளர்களான மாகாண சபை உறுப்பினர்கள் நடத்திய கூட்டத்தில், சிறிமாவோ தலைமையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எதிர்வரும் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று கூறும் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

[3 ஆம் பக்கம் பார்க்க]

தொகுதியை மாற்ற பிரதமர் ரணில் முடிவு

கொழும்பு, ஏப். 16

எதிர்வரும் தேர்தலில் தோல்வியைத் தவிர்ப்பதற்காக கொழும்பு தெற்குத் தொகுதியில் போட்டியிடுவது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முடிவு செய்திருக்கிறார்.

அரசாங்கத்தின் புலனாய்வாளர்களின் அறிக்கையை மேற்கோள் காட்டி "ராவய" சிங்கள வார இதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு நடந்த மேல்மாகாணசபைத் தேர்தலில் பிரதமரின் பியகம தொகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வி அடைந்ததால் தொகுதி மாறி போட்டியிட பிரதமர் முடிவு செய்திருப்பதாகவும் அந்தவகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [எ]

தென்மராட்சிப் பகுதியில் நேற்று விமானத் தாக்குதல்

நேற்று நண்பகல் 12.45 மணியளவில் தென்மராட்சியில் இருவேறு இடங்களில் ஸ்ரீ லங்கா வான்படையின் இரு புக்காரா விமானங்களும், ஒரு சியாமாசெட்டி விமானமும், இரு ஹெலிகளும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

வீசப்பட்ட குண்டுகள் தென்னந்தோட்டங்களிலும்' வேறும் காணிகளிலும் வீழ்ந்து வெடித்தன. விமானங்களில் இருந்து றொக்கட் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. இவ் விமானத்தாக்குதல்களை அடுத்து தென்மராட்சியின் பிரதான இடங்கள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன. (இ-31-117-3)

தொண்டமான் டி.பி சந்திப்பால் இ. தொ. கா உட்பூசலில் திருப்பம்

அமைச்சர் தொண்டமானுடன் ஜனாதிபதி விஜேதுங்கா பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உட்பூசலில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜ. தே. க பொதுச் செயலாளர் சிறிசேன கூரே வெளிநாடு சென்றுள்ள சமயத்தில், விவசாய ஆராய்ச்சி மற்றும் விவசாய அபிவிருத்தி அமைச்சர் தர்மதாஸா பண்டாவின் தலையீட்டின் மீதே விஜேதுங்க — தொண்டமான் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொண்டமானைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி சம்மதிப்பதற்கு உரிய காரணம் மலையகத் தமிழரின் வாக்குகளை திரட்டிக்கொடுக்கக் கூடிய சக்தி வாய்ந்தவராக தொண்டமான் இன்னும் விளங்குவதாக தேசிய உளவுப்பணியகம் சமர்ப்பித்த அறிக்கையே என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய உளவுப்பணியகம் மலையகத்திலும் கரையோரப்பகுதிகளிலும் நடத்திய ஆய்வில் தொட்டத் தொழிலாளர்களின் வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெற்றுக் கொடுக்கக்கூடிய வல்லமை செல்லச்சாமிக்கு பத்துச் சதவீதம் தானும் இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொண்டமான் ஒதுங்கியிருந்ததன் காரணமாகத்தான் கடந்த தென்மாகாண சபைத் தேர்தலில் தோட்டத் தொழிலாளர்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-6)

தமிழீழ பிரஜாவுரிமை தரும்படி பிரபாவை கேட்கப் போகிறோம்

'ராவய'வுக்கு சிங்கள யுத்தக்கைதி கடிதம்

எங்களை விடுவிப்பதற்கு அரசாங்கம் இனியும் நடவடிக்கை எடுக்காவிடில் எங்களுக்கு தமிழீழப் பிரஜாவுரிமை தரும்படி விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைக் கேட்கப் போகிறோம்.

விடுதலைப் புலிகளிடம் யுத்தக் கைதியாக இருக்கும் பொலீஸாரில் ஒருவரான பி. எஸ். பி. பண்டார என்பவர் சிங்கள வார இதழான 'ராவய' வுக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'ராவய' வுக்கு எழுதிய கடிதத்தில் பொலீஸ்காரர் பண்டார மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இன்று நாங்கள் அநாதரவான நிலையில் இருக்கிறோம். எமது விடுதலைக்கு உதவும்படி மலைவத்த அஸ்கிரிய பீடாதிபதியை எமது பெற்றோர் சந்தித்துக் கேட்டிருந்தனர். தொலைபேசி பழுதடைந்து விட்டதுஎன்றும் அதனால் ஜனாதிபதியுடன் கதைக்கமுடியவில்லை என்றும் "இதெல்லாம் கர்மவினை" என்றும் மலைவத்த அஸ்கிரிய பீடாதிபதி பதில் அளித்துள்ளார். இதுதான் எங்கள் பௌத்த தலைவர்களின் நிலை

ஆனால் ஆயர்மார் இங்குவந்து எங்களை அடிக்கடி சந்திப்பது எமக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

சமாதானத்திற்கு அடையாளமாக கைதிகளை விடுதலை செய்யும்படியும். அதன்பின்னர் புலிகளுடன் பேசலாம் என்றும் பிரதமர் கூறி உள்ளார். இனியும் புலிகளை ஏமாற்ற முடியாது.

எங்களில் 10 பேர் ஏற்கனவே நிபந்தனைகளின்றி விடுவிக்கப்பட்டு விட்டனர். இனிமேலும் அடையாளமாகச் சரி மனிதாபிமானமாகச் சரி எங்களை விடுதலை செய்ய மாட்டார்கள்.

எங்களது விடுதலைக்குப் பதிலாக கைதிகளாக உள்ள புலிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். அல்லது பொருளாதார தடையை நீக்கி யாழ்ப்பாணத்திற்கு பொருள்களை அனுப்ப வேண்டும். இந்த இரண்டில் ஏதாவது ஒன்று நிறைவேறாமல் எமக்கு விடுதலை கிடைக்காது.

இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-9]

கிழக்கின் தமிழ்-முஸ்லிம் ஆதரவை திரட்டுவதற்கு குழு

தேர்தலையொட்டி சுதந்திரக்கட்சி நடவடிக்கை

கொழும்பு, ஏப். 16

ஜன திபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர் மற்றும் முஸ்லிம்களின் ஆதரவைத் திரட்டுவது குறித்த நடவடிக்கைகளில் ஈடுபட சுதந்திரக்கட்சி உபகுழு ஒன்றை நியமித்துள்ளது.

முன்னாள் அமைச்சரும் அனுராதபுரம் மாவட்ட எம். பியுமான கே. பி இரத்தினாநாயகா தலைமையிலான இக்குழுவில் தர்மசிறி சேனநாயகா, லக்ஷ்மன் ஜயக்கொடி, மைத்திரிபால சிறிசேன, டி. ஏ. கே. தேவரப்பெருமா ஆகிய எம். பிக்களும் அவரி மௌலானாவும் அங்கம் வகிக்கின்றனர்.

தனது நடவடிக்கைகளில் காணப்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி இக்குழு கட்சியின் அடுத்த மத்திய செயற்குழுவில் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்குழு விரைவில் வவுனியா, திருகோணமலை, கல்முனை ஆகிய இடங்களுக்கும் மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளுக்கும் விஜயம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-எ)

மனித உரிமைகள் குறித்த அரச தகவல் பொய்யானது

மனித உரிமைவாதிகள் கருத்து

யாழ்ப்பாணம், ஏப். 16

ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் மதிக்கப்படுவதாக அரசதரப்பில் கூறப்படுவது பொய்யான தகவல்கள் என்றும்—

அரசு மனித உரிமைகளை மதித்து நடப்பதில்லை என்றும்— மனிதஉரிமை வாதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மனித உரிமைகளை மதிக்கும் வகையில் பலவித ஏற்பாடுகளை, ஸ்ரீலங்கா அரசு செய்துள்ளதாக சட்டமா அதிபர் திலக் மாரப்பன ஜெனிவாவில் நடந்த கூட்டத்தில் தெரிவித்த போதும் மனித உரிமை மீறல்களில் இலங்கை அரசு தொடர்ந்து ஈடுபட்டுள்ளது என்று மனித உரிமைவாதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இத்தகவலை 'மோர்ஜ்' அமைப்பின் சஞ்சிகை வெளியிட்டுள்ளது. (இ-3)

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 16

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று தலைப் புலிகளின் அரசியல் துறையினர் கூறினர். (இ-3)

கிழக்கு பல்கலைக்கழகம் திறக்கப்படுகிறது

கொழும்பு, ஏப். 16

கிழக்குப் பல்கலைக்கழகம் இம் மாதம் 18 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வன் செயல்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து இப்பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மற்றும் விவசாய பீடங்கள் காலவரையறையின்றி மூடப்பட்டிருந்தன. (இ-எ)

முச்சந்தி முரளி

ஹெலிகள் சுடப்பட்ட விவகாரம்: முழு விசாரணைக்கு கிளின்டன் உத்தரவு

லண்டன், ஏப். 16

வடஈராக்கில் இரண்டு அமெரிக்க ராணுவ ஹெலிகொப்டர்கள் அமெரிக்க போர் விமானங்களால் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் குறித்து முழு விசாரணை நடத்தும்படி அமெரிக்க அதிபர் கிளின்டன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவை ஈராக்கிய ஹெலிகள் என தப்பாக நினைத்துச் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தன.

இச் சம்பவத்தில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்கர்கள். ஏனையோர் பிரிட்டிஷ், பிரேஞ்சு மற்றும் துருக்கி ராணுவ அதிகாரிகள். [எ]

ஐ.தே. கட்சி எம். பிக்கள் வெளிநாடு செல்லத் தடை

டி. பி. நேற்று உத்தரவு

கொழும்பு, ஏப். 16

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர் வரும் டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் வரை வெளிநாட்டுப் பயணம் எதுவும் செய்ய முடியாது.

ஜனாபதி டி. பி. விஜயதுங்க ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று வெளிக்கிழமை இவ்வாறு கூறினார்.

வெளிநாட்டுப் பயணத் தடை அடுத்த மாதத்திலிருந்து அமுலாகும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் வேலையில் முழுமூச்சாக ஈடுபடலாம் எனவும் அவர் கூறினார். [எ]

படையினர் சூடுகள் இறக்கும் தொழிலாளி பலி

யாழ்ப்பாணம், ஏப் 16

கல் இறக்கும் தொழிலாளி ஒருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகி, பலாலியில் இறந்து விழுந்து மரணமானார்.

பண்டத்தரிப்பு, சில்லாலை, பகுதியில் நேற்றுக் காலை இச் சம்பவம் இடம்பெற்றது

சந்தியா பாக்கியநாதன் (வயது 56) என்பவரே இறந்தவர் ஆவார்.

பண்டத்தரிப்புப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சங்கானை தெற்கு அதிகி முகாமில் வசித்து வந்த காலஞ் சென்ற நபர், கல் இறக்குவதற்காக வழமைபோல் சில்லாலை சென்று பனை ஏறியபோதே இச்சம்பவம் இடம்பெற்றது.

மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 16

நேற்றுக் காலையும் மண்டைதீவுப் பகுதியில் இருந்து யாழ் குடாநாடோரப் பகுதியை நோக்கி ஸ்ரீலங்காபடையினர் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் மூன்று சிறுவர்கள் காயமடைந்தனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்லின அல்சேஷன் நாய்க் குட்டிகள், நல்லின முட்டை இடும் வளர்ப்புக் கோழிகள், குஞ்சுகள், இறைச்சிக்கோழிகள், அரைமுட்டைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. தர்மலிங்கம், 639/1, நாவலர் வீதி, (செட்டித்தெருவுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (7309)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பனிடம் முட்டைகள், வான் கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (30190)

வீடு விற்பனைக்கு

மட்டுவில் வடக்கில் பருத்தித்துறை வீதியில் திருக்கணித நிலையத்திற்கு அருகில் பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீ விஷ்ணு முகவர், பிரதான வீதி, சாவகச்சேரி (30377)

கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பூசி மருந்து கொடுத்த 7 கிழமை Golden Comet கிடைப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. நல்லூர் வீடியோசென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30423)

இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் காலை 7-00 — 11-00 வரை புதன், சனி, ஞாயிறு கிழமைகளில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [30424]

பஞ்சாங்கக் கையேடு

சுபநேர, சுபகரும, நாள் கோள், நற்பணிகள் ஜனவரி 94 முதல் டிசம்பர் வரை தொகுப்பு: எஸ். செல்வநாயகம், B.A. எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-7821)

கோல்டன் கொமட்

கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (30358)

பேட்டுக்குஞ்சு விற்பனை

ஹைலன் பிறவுன் ஒரு மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி', சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (30359)

காவேரி சீயாக்காய்

கண் குளிர்மை, ஞாபகசக்தி, கூந்தல் வளர்ச்சிக்கும், பேன் சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதற்கும் கேசம் உதிர்வதைத் தடுப்பதற்கும் நீங்கள் பாவிக்க வேண்டியது காவேரி சீயாக்காய்ப் பவுடர். (30161)

புத்தாண்டுப் பலன்கள்

ராகு, கேது மாற்றம், (சந்தியாவின்) 1994—95 புத்தாண்டுப் பலன்கள், லைவிசேஷம், முகூர்த்த நேரம் எல்லா ராசிகளின் பலன்கள் அடங்கியவை ரூபா 10/-. எங்கும் விற்பனையாகிறது சோபிதா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (30379)

டைனமோ சேவை

7 K.W., 13 K.W. இற்கு இடைப்பட்ட எலுகொண்ட 1500 R.P.M. உடைய 3 பேஸ் டைனமோ தேவை. தொடர்பு: ராஜா கிறீம் ஹவுஸ், இல. 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (7310)

O/L மாணவர்களுக்கு

தமிழ் மூலம் ஆங்கில பயிற்சிகள் வகுப்புக்கு வரி தமிழாக்கம் செய்யப்பட்ட கடந்த கால வினாத்தாள்கள், மாதிரி வினாத்தாள்கள் மற்றும் தமிழ் மூலம் ஆங்கில பயிற்சிகள். ஆக்கம்: Mr. K. திக்கமோகன் விலை 25/-. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-7820)

படப்பிடிப்பு கலையகம் மங்களகரமான திறப்பு விழா

சிறந்த முறையில் படம் பிடித்துக்கொள்ள

சோதி படப்பிடிப்பு கலையகம்

K. K. S. வீதி, பல்லாகம்.

இன்று (16-04-94) சனிக்கிழமை காலை 7-53இல் இருந்து 9 06 வரையிலான சுப முகூர்த்த வேளையில் மேற்படி கலையகம் திறந்து வைக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(7069)

அறிவுத் தேடலின் அவசியம் உணர்ந்த சேவை

பரீட்சை வினா - விடைகள்
பாட நூல்கள்
அறிவியற் சஞ்சிகைகள்
சிறுவர் இலக்கியங்கள்
ஆய்வுக்குரிய நூல்கள்
பொழுது போக்கு சஞ்சிகைகள்

வாசிக்க வாருங்கள்
வந்து பயனடையுங்கள்

மாணவர் அறிவியற் கழகம்,
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு,
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

[30414]

நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

A/L 1996

கலை, வர்த்தகம்

பொருளியல்	—	திரு. உதயன்
கணக்கியல்	—	திரு. ஸ்ரீ
வர்த்தகம்	—	திரு. தேவா
அளவையியல்	—	திரு. எஸ். எஸ். மனோகரன்
இந்துநாகரீகம் / இந்துசமயம்	—	திரு. சோதி
தமிழ்	—	திரு. குழந்தை
புவியியல்	—	திரு. வேலா
நாடகமும், அரங்கும்	—	திரு. சந்தியா

ஆரம்பமாகிவிட்டன

குறிப்பு:
குறிப்பிட்ட 200 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும் என்பதால் அனுமதிகளை உடன் உறுதிப்படுத்தவும்.

— நிர்வாகி.

(சி-7833)

நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

O/L DAY CLASSES

விஞ்ஞானம்	—	இரா. செல்வவடிவேல்
கணிதம்	—	திரு. மகேந்திரன்
தமிழ் / சமயம்	—	திரு. பண்டிதர்
சமூகக்கல்வியும் / வரலாறும்	—	திரு. வேலா
ஆங்கிலம்	—	திரு. தர்மலிங்கம்
பரிதநகம்	—	திரு. நவம்
சித்திரம்	—	திரு. ரமேஸ்

ஆரம்பமாகிவிட்டன

குறிப்பு:
திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய 6 நாட்களும் வகுப்புகள் நடைபெறும். முழுப்பாடத்திட்டத்துடன், கடந்த கால வினா-விடையும் நடைபெறும்.

— நிர்வாகி,

[சி-7829]

'A' LEVEL CENTRE

1ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

A/L 96
கணித, விஞ்ஞான வகுப்புகள்

ஆரம்பம்: 16 - 04 - 1994
SAT & SUN

இரசாயனவியல்	—	திரு. நாகரட்ணம் B Sc.
பௌதிகவியல்	—	திரு. ஜெயசீலன் B. Sc.
தூய / பிரயோக கணிதம்	—	திரு. நித்தியானந்தன் B. Sc.
தாவரவியல்	—	திருமதி சுரேந்திரன் B Sc.
விலங்கியல்	—	திரு. ஞானேந்திரன் Dip. Sc.

பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

[சி-7803]

G. A. Q. Ist In Com. 95

யாழ், பல்கலைக்கழகம்

மேற்கூறப்பட்ட பா. நெறிக்கான யாழ். பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விரிவுரைகள்
07-05-1994 (9 மணி)
ஆரம்பமாகவுள்ளன.

விவரங்களுக்கு:
எஸ். அருள்நங்கை.

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி-8005]

33ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்: 12 — 02 — 1931

இறைவன் அடியில்: 15 — 03 — 1994

கணபதிப்பிள்ளை சண்முகம்
(ஐயாத்துரை)
(ஓய்வு பெற்ற புகையிரத கங்காணி)

அன்பும் பாசமும் உடைய அப்பா! நீங்கள் அன்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எல்லோருக்கும் அன்பாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தலைவா! அப்பா எங்கள் முன்னேற்றத்திற்கும் உயர்வுக்கும் வழிகாட்டியாய் இருந்த அன்புத் தெய்வமே! எங்கள் அனைவரையும் விட்டுப் பிரிந்து மாதம் ஒன்றானாலும் உங்கள் உருவமும் நினைவும் எங்கள் மனதை விட்டு எப்போதும் நீங்காது. மனதில் மறையாத் தெய்வத்திற்கு மலர் முடி தாங்கள்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தி கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"சந்தானவளவு"
[illegible]
கனடா.

(7070)

வாரிவளவு நல்லியக்கசபை - காரைநகர்

தமிழ் புதுவருட சிறுவர் கலை நிகழ்ச்சிகளும் பரிசளிப்பும் - 1994

இருபத்திநான்காவது வருடம்

காலம்: 1994 — 04 — 17 ஞாயிறு காலை 9மணி
இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
தலைவர்: திரு. வே. முருகமூர்த்தி அவர்கள் (பிரதி அதிபர், யாழ்ரன் கல்லூரி)
பிரதம விருந்தினர்:
திருமதி பி. என் ஸ்கந்தராஜா அவர்கள் (அதிபர், யா/வேம்படி மகளிர் கல்லூரி)

9-00 — 11-00: காரை. சிறுவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள்
11-00 — 12-00: பாராட்டலும், பரிசளிப்பும்

★ 1992, 1993 க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் 260 புள்ளிகளுக்கு மேல் பெற்று பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதியுடைய காரை. மாணவர்கள்.
★ வாரிவளவு நல்லியக்கச் சபை நடத்திய க. பொ. த. (சாதாரணம்) கணித, விஞ்ஞான முன்னோடிப் போட்டிப் பரீட்சையில் பரிசுபெறும் 22 காரை. மாணவர்கள்.
★ பாவர் பாடசாலை ஆசிரியைகள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
வாரிவளவு நல்லியக்கச் சபை,
காரைநகர்.

அனுசரணை:
ரட்ணம் பார்மஸி அன் குறோசறி
யாழ்ப்பாணம்

[30429]

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L DAY CLASSES

(8-30 — 2-00)

புதிய வகுப்பு

ஆரம்பம்: 21—04—1994
[வியாழன்] காலை 8-30 மணி

★ கடமை கட்டுப்பாடுடன் நடத்தப்படும்.
★ மாதாந்த பயிற்சிப் பரீட்சை நடத்தப்படும்.
★ ஒவ்வொரு வகுப்புகளிலும் குறிப்பிட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளலாம்.

[சி-8002]

ST. JOHN'S COLLEGE JAFFNA
பழைய மாணவர் சங்கம்

ஆண்டுப் பொதுக் கூட்டம் 30 - 04 - 1994 அன்று சனிக்கிழமை காலை 9-00மணிக்கு கல்லூரியில் நடைபெறும் என்பதை அங்கத்தவர் அனைவருக்கும் அறியத்தருகின்றேன். பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் அங்கத்தவர்கள் அதிறை 23-04-1994 க்கு முன்னதாக எழுத்து மூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்

அன்று நடைபெறும் பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்ச்சி நிரல் அங்கத்தவர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

த. செல்வராஜா.
கௌரவ செயலாளர்

22/12, பாரதி வீதி,
கண்டிக்குளி. (30425)

வெளிவந்து விட்டது - விற்பனையாகின்றது.

ஆங்கில உதவி ஆசிரியர் பரீட்சைக்கான வழிகாட்டி

ENGLISH TEACHERS EXAM GUIDE

8 வருடங்கள் நடைபெற்ற பரீட்சை வினா - விடைகள்

(எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்)

வெளியீடு: **அஸ்ரன் பதிப்பகம்**

[சி 8007]

ஓராண்டு நினைவஞ்சலி

(16 — 04 — 1994)

கதிரேசு சுப்பிரமணியம்

அக்பிலே பண்பிலே பாரிலே உயர்ந்தோனாய்
ஈடிணையில்லா இல்லத்தின் தலைவனாய்
வளமான வாழ்விற்கு வித்திட்ட தந்தையாய்
வாழ்வாங்கு வாழ்ந்து வானிறை சேர்ந்தாய்!
ஓராண்டு தான் ஓடி மறைந்தாலும்
மாறாது நம் துயரம்
மறவாது நம் வதனம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும்.

மனைவி, மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

கே. கே. எஸ். வீதி,
தெல்லிப்பளை. (30421)

சிவமயம்

புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்!
நிகழும் பவ வருடம் சித்திரை மாதம் 3ஆந் திகதி இன்று (16-04-1994) சனிக்கிழமை பகல் 7மணி 55 நிமிஷம் தொடக்கம் 9-00க்குள்ளாக
★ வரும் சுபலக்கின நல்வேளையில் ★

எம்மால புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

ஞானம் [ல்பொருள் விற்பனைக் கூடம்]

GNANAM TRADE CENTRE

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால் அதற்கு தாங்கள் வருகை தந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம்
★ அன்புடன் அழைக்கின்றோம் ★

இங்ஙனம்,
அஜந்தாஸ் புடவை மாளிகை

66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

நீலிக்கண்ணீர்!

போர் காரணமாக வடக்கு - கிழக்கில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு சைவ ஆலயங்கள் சேதமடைந்துள்ளன. ஆனால் சேதமடைந்த ஆலயங்களை புனருத்தாரணம் செய்து முடிக்க அரசு அவ்வளவு ஆக்கறை காட்டவில்லை.

இவ்வாறு கவலை தெரிவிப்பவர் சைவ ஆலயங்களின் நலனில் அக்கறைகொண்ட மற்றும் ஏதாவதும் பிரமுகர் ஆவர். சைவ அடியார்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் பிரமுகருமல்லர் ஸ்ரீலங்கா அரசாங்கத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு. பி. பி. தேவராஜே தமது இயலாமையை இப்படிக் கவலையாக வெளியிட்டிருக்கிறார்!

போரில் சேதமுற்ற ஆலயங்களை புனருத்தாரணம் செய்வதற்குத் தேவையான நிதி குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை மட்டத்திலும், ஜனாதிபதிக்கும் சொல்லப்பட்டுள்ளது என்று கூறி தமிழர், இந்துக்கள், சைவர்கள் தொடர்பான விடயங்களில் அரசு எந்தளவு வேண்டா வெறுப்புடன் நடந்து கொள்கிறது என்பதனையும் அம்பலப்படுத்தியுள்ளார் அவர்.

தமிழர்கள் இந்துக்கள், சைவர்களின் உரிமைகளை வழங்கக்கூடாது, அவர்களின் நலன்களைப் புறக்கணித்து இரண்டாந்தரப் பிரசைகளாகவே நடத்தவேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்பது அதில் அங்கம் வகிக்கும் ஓர் அமைச்சரின் வாயிலிருந்து வெளிவந்துள்ளது. அதாவது அமைச்சர் தேவராஜ் தெரிவித்த கவலை, சைவ ஆலயங்களை அழிப்பதும், அவற்றைச் சேதமடையச் செய்து சைவர்களின் வழிபாட்டு உரிமையைப் பறிப்பதுமே அரசாங்கத்தின் நோக்கம் என்பதனை தொக்கு நின்று புலப்படுத்துகின்றது!

இந்த நாட்டில் சிங்களமும், பௌத்தமுமே வளரவேண்டு ; சிங்களவர்கள் மட்டுமே வாழ வேண்டும் என்ற மூன்றாவேறிலிருந்து முளை விடுவதே இந்த நோக்கம்.

மேலும் வடக்கு - கிழக்கில் இத்தனை ஆலயங்களும் தற்செயலாக, தவறுதலாகச் சேதமாக்கப்பட்டு விட்டன என்று அரசு அவ்வப்போது கூறித் தனது நோக்கத்தை மறைக்க முயல்வது எவ்வளவு பொய்யானது என்பதனையும் அமைச்சர் தேவராஜின் கூற்று எடுத்துக்காட்டுகிறது.

இந்து மதத்துக்கும், பௌத்தமதத்திற்கும் இடையில் நிறைய ஒற்றுமை உண்டு கோட்பாட்டு ரீதியிலும், தத்துவார்த்த வகையிலும் இரண்டு சமயங்களுக்கும் இடையே உள்ள வேற்றுமைகளை விட ஒற்றுமைகளே அதிகம். ஆகையால் அந்த ஒற்றுமைகளை அடித்தளமாக வைத்து சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக, ஒரு தாய் பிள்ளைகளைப் போல வாழ வேண்டும் என்ற சொல்வர்களுக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும் என்பது போல அரசின் போக்கு அமைந்துள்ளது!

மேலும் வடக்கு-கிழக்கில் உள்ள சைவ ஆலயங்கள் கிறிஸ்தவ தேவாலயங்கள், மீத்குண்டு விசுத்தி தாக்குதலும், எறிகணைத் தாக்குதலும் நடத்தி அவற்றைச் சேதமாக்க வேண்டாம். அழிக்க வேண்டாம். ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடப்பதனைத் தடுக்க வேண்டாம் என்று அரசாங்கத்திடம் கோருவது, கல்லுவிடமே நீதி கேட்பது போலாகும்.

பௌத்த சமயத்தை மட்டும் நாம் காப்பாற்றவில்லை. இந்து, இஸ்லாம் சமயங்களின் வளர்ச்சிக்கு உழைக்க இரண்டு அமைச்சர்களை வைத்திருக்கிறோம் என்று உலகத்துக்குக் காட்டிக் கொண்டே இந்து, கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுகின்றன; சேதமாக்கப் படுகின்றன.

இந்த வகையில் தேவராஜ் போன்றவர்கள் தங்களுக்கு ஒரு பதவி வேண்டும் என்பதற்காக, அரசின் நோக்கத்திற்குத் துணைபோகிறார்கள். அவர் பி. பி. லி பேட்டியில் வெளியிட்ட கருத்து — தெரிவித்த கவலை—வெறும் நீலிக் கண்ணீரே!

அரச ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு உட்பட

மக்களுக்கு நிவாரணம் வழங்க பிரதமர் தலைமையில் குழு

தேர்தல் தோல்வியை அடுத்து டி. பி. நடவடிக்கை

கொழும்பு, ஏப். 16

உதவி தேவைப்படும் சகல மக்களுக்கும் வழங்கப்பட வேண்டிய நிவாரணங்கள் அடங்கிய திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையான உயர்நிலைக்குழு ஒன்றை ஜனாதிபதி விஜேதுங்கா நியமித்துள்ளார்.

திட்டத்தை இம்மாத முடிவினுள் சமர்ப்பிக்கும்படியும் இக்குழுவை ஜனாதிபதி பணித்துள்ளார்.

இக்குழுவில் சிரேஷ்ட அமைச்சர்களும் உயர்நிலை அதிகாரிகளும் அங்கம் வகிக்கின்றனர்.

புலிகள் மீதான தடை குறித்து மத்திய அமைச்சர் சவானின் கூற்றுக்கு ஜெயலலிதாமறுப்பு

சென்னை, ஏப். 16

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்று கோரி தமிழக அரசு மத்திய அரசுக்கு கடந்த ஜனவரியில் கடிதம் எழுதியதாகவும்

அக்கடிதத்துக்கு மத்திய அரசு விவரம் கேட்டு பதில் அனுப்பியதாகவும் முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று தெரிவித்தார்.

தடையை நீக்கும்படி கேட்டு தமிழக அரசிடம் இருந்து தமக்கு கோரிக்கை ஏதும் வரவில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்திருப்பது தமக்கு வியப்பைத் தந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தடையை நீடிப்பது பற்றி மத்திய அரசு கோரியுள்ள விவரங்களை மாநில புலனாய்வுத் தலைவர் திரு பத்ரி சென்ற மாதக் கடைசியில் புதுடில்லி சென்று சமர்ப்பித்திருந்தார் என்றும் அவர் கூறினார். (ஒ எ)

பிறந்த எவரும் இறப்பது நிச்சயம்; புதிய படையினருக்கு தளபதி உபதேசம்

கொழும்பு, ஏப். 16

விமானப்படையில் புதிதாகச் சேர்ந்துள்ளவர்கள் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கத் தியாகம் செய்ய வேண்டும்.

எயர்வைஸ் மார்ஷல் டபிளியு. டி. விஜயநாயகா முன்னாடவாறு தெரிவித்தார்.

விமானப்படையில் புதிதாகச் சேர்ந்து பயிற்சி பெற்று வெளியேறிய 220 படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட பின்னர் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கோழை ஆயிரம் தடவைகள் இறப்பான். வீரனுக்கு ஒரு தரம் தான் இறப்பு வரும். பிறக்கும் எவரும் இறப்பது நிச்சயம் கோழையாக இறப்பதிலும் பார்க்க வீரனாக இறப்பதே மேலாகும்" — என்றும் அவர் குறிப்பிட்டார்.

அணிவகுப்பு மரியாதை சீனன்வாடி போர்ப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது.

எதிர்க்கட்சியோடு வாக்கெடுத்த

உபசபாநாயகர் மீது நடவடிக்கை இல்லை?

கொழும்பு, ஏப். 16

உபசபாநாயகர் காமினி பொன்சேகா மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தமக்கு அதிகாரம் கிடையாது என்று ஐ.தே.க. ஒழுங்காற்று நடவடிக்கைக்குழு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

எப்படியாயினும், தமது இம் முடிவை பகிரங்கமாக வெளியிட ஐ.தே.க. ஒழுங்காற்று நடவடிக்கைக்குழு தவறிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த பிரேரணையை எதிர்த்து வாக்களிக்க தவறியதற்காக காமினி பொன்சேகாவிடம் ஐக்கிய தேசியக்கட்சியின் உதவிச் செயலாளர் விளக்கம் கோரியிருந்தார்.

"இப்படி விளக்கம் கோரியதே உபசபாநாயகருக்கு உரிய சிறப்புரிமைகளை மீறும் செயலாகும் நான் சிறப்புரிமை மீறல் குற்றச்சாட்டைக் கொண்டு வந்தால் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியவர் இருவருடகாலச் சிறைத் தண்டனை பெறுவார்" என்று காமினி பொன்சேகா தெரிவித்தார்.

உபசபாநாயகர் பதவியை அவமதித்ததற்காக மன்னிப்புக்கோர வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-எ)

'செப்ரிசீமியா' கொடூரம்; 3 மாதங்களில் 92 பேர் பலி!

யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் பல்வேறு தரப்பட்ட தொற்று நோய்களினால் இரத்தம் நஞ்சூட்டப்பட்டு "செப்ரிசிமியா" என்ற நிலையில் 92 பேர் மரணமடைந்துள்ளனர்.

குடல் சார்ந்த தொற்று நோய்களாலும், மலேரியா போன்ற கட்டுப்பாடற்ற தொற்று நோய்களாலும், குண்டுச் சிதறல்களாலும், எரிகாயங்களுக்கும் உள்ளானவர்களும் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியற்ற நிலையில் இறந்துள்ளனர்.

உடலில் போதியளவு நோய் எதிர்ப்புச் சக்தியற்ற நிலையில் — இரத்தம் நஞ்சூட்டப்பட்டு "செப்ரிசீமியா" வாக்கியவேறு நோய்களினால் பாதிக்கப்படும் பலரும் இறப்பை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ - 162)

இந்திய ராணுவத்தில் இருந்து ஒரே நாளில் 6 ஜெனரல்கள் பதவி விலகுவதாக அறிவிப்பு!

புதுடில்லி, ஏப். 16

இந்திய இராணுவத்தில் இருந்து ஒரேநாளில் ஆறு ஜெனரல்கள் பதவி விலகுகின்றனர்.

இவ்வாரம் பதவி விலகும் இவர்களின் இடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் யுகோஸ்லேவியாவில் ஐ. நா. அமைதிப் படையின் தளபதியாக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியார் இந்திய இராணுவ உதவி தலைமை நிர்வாக அதிகாரியாக பதவி ஏற்கிறார்.

ஒரே நாளில் ஆறு இராணுவ ஜெனரல்கள் பதவி விலகுவது அசாதாரண சம்பவம் ஆகும் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். பதவி விலகும் காலட்டத்தை அவர்கள் அடைந்ததே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஜெனரல்கள் நியமிக்கப்பட்டதும் இந்திய இராணுவத்தில் உயர் பீடம் புதிய தோற்றத்தைப் பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை —

இந்திய இராணுவத் தலைமையகத்தின் புதிய இராணுவச் செயலாளராக, இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையில் பணியாற்றிய லெப்டினன்ட் ஜெனரல் ரவி நியமிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (எ)

இன்று

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ். கல்வி வலயம் 2இல் கடமையாற்றும் பிரதி, உதவி கல்விப் பணிப்பாளர்கள், இணைக்கப்பட்ட அதிபர்கள், முதன்மை ஆசிரியர்கள் ஆகியோருக்கான செயலமர்வும், கருத்தரங்கும் இன்று முதல் மூன்று நாட்களுக்கு காலை 8-30 மணிமுதல் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறும். (இ-8)

விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 16

டொனாவெட் உணவுகுமார் கிரிக்கெட் கற்றுப் போட்டியில் இன்று காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மோதும் அணிகள் வருமாறு:-

★ ஜெனியன் வி.க எதிர் ஸ்ரந்தா ஐ. வி. க. (இ)

திருமலையில் தேசிய பாடசாலை

கொழும்பு, ஏப்.16

திருகோணமலை சென் ஜோசப் கல்லூரி கடந்த மாதம் 31 ஆம் திகதியில் இருந்து தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

புலிகளின் குரல் வானொலியில்

16-04-1994
சனி இரவு

★ 8-01 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — "அணையாத தீபம்" நடகம்
★ 8-10 — அறிவியல் கலை சம்
★ 8-25 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம் - ஒளி எங்கும் பரப்பிடவே எழுந்திட்ட நெருப்பு நாங்கள்

17-04-1994
ஞாயிறு காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "தியாகத் தீயில் அன்னைபூபதி"
★ 7-25 — கவிதைகள் மலர்தலவை
★ 7-45 — செய்திகள்
★ 7-50 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-55 — தாயகப் பாடல்

3 போலீஸார் இடைநீக்கம்

இளைஞர் ஒருவரை மனிதத் தன்மையற்ற முறையில் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக வாரியப் பொலிஸ் பொலீஸைச் சேர்ந்த இரு சப் இன்ஸ்பெக்டர்களும் கான்ஸ்டபிள் ஒருவரும் குருநாகல் கிரேஷ்ட பொலீஸ் அதிபர் ரி. என். சி. சில்வாவினால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தரக்கு தலுக்குள்ளான இளைஞர் 23 வயதான விமல் சாந்த பண்டார என்று தெரிவிக்கப்பட்டது.

அன்னை பூபதி நினைவாக விடுகள் அமைப்பு

அன்னை பூபதியின் நினைவையொட்டி தமிழர் புனர்வாழ்வுக்கழக தென்மராட்சிப் பிரிவினர் மிருசுவில் தவசிகுளம் பகுதியில் பதினைந்து வீடுகளை அமைத்து வருகின்றனர்.

இந்த வீடுகள் இப்பகுதியில் வாழும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இதேவேளை —

கிளாலி பண்டிதர் குடியிருப்பில் நூறு குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் வீடுகளை அமைத்து வழங்கவுள்ளனர். (ஒ-117)

மேதின ஏற்பாடு; நாளை கூட்டம்

கோண்டாவிலில் உள்ள விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்டச் செயலகத்தில் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள மேதின ஏற்பாடுகள் சம்பந்தமான கருத்தரங்கில்—

அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்சபை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கேட்டுக்கொள்ளார். (ஒ)

வீட்டிலே தோட்டம் செய்தால்
நாட்டிலே பசி தீரும்

அடுத்த.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் சிறிமாவோ தேர்தலில் போட்டியிட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அவருக்கு வேட்புமனுவை வழங்குமா என்பது சந்தேகத்துக்கு இடமானது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வடமேல் மாகாண முதலமைச்சராக இருக்கும் ஜி எம். பிரேமச்சந்திரா முன்னணியின் பொதுச் செயலாளராக இருக்கும் வரை, சிறிமாவிக்கு வேட்புமனு கிடைக்காது என்றும்—

எனவே சிறிமாவோ பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிற் போட்டியிடுவதே தற்போதுள்ள ஒரே ஒரு வழி என்றும் பி. பி. லி தெரிவித்தது. (இ-எ-6)

வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற விபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லப்டன் அறிவு (வேலும் மயிலும் வேலாயுதம் கப்பர்மடம், பருத்தித்துறை) வீரமரணமடைந்தார். (இ-3)

அழைப்பு

"போஸ்கோ" நிறுவனத்தின்
ஆதரவுடன
யாழ் கல்வித் திணைக்களம்
யாழ் மாவட்ட அமெச்சூர்
மெய்வல்லுநர் சங்கம்
ஆகியவை இணைந்து
யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்காக
நடத்தி வரும்
மெய்வல்லுநர் சட்ட விதிகள் பற்றிய
கருத்தரங்குத் தொடரின்
இறுதி நாள் நிகழ்ச்சி

காலம்: இன்று (16-04-1994) சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 11-00 மணி
இடம்: யாழ். இந்துக் கல்லூரி
குமாரசாமி மண்டபம்

தலைவர்:
டாக்டர் சி. டபிள்யூ. ஜெயகுலராஜா
(தலைவர், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்)

பிரதம விருந்தினர்;
பிரபல மெய்வல்லுநர் வீரர்
கலாநிதி என். எதிர்வீரசிங்கம்

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. இ. சிவானந்தன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், தலைவர் - யாழ். மாவட்ட பாடசாலைகள் அபிவிருத்திக் குழு)
திரு. வெ. இளங்குமரன்
(பொறுப்பாளர், கல்வி மேம்பாட்டுக் கழகம்)

★ அனைவரும் வருக ★

த. அருணகிரிராஜா,
(உதவிக் கல்விப் பணிப்பாளர்— உடற் கல்வி)

ந. வித்தியாதரன்,
(செயலாளர், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்).

[சி-7758]

நல்லூர் பிரதேச வாத்தகர் சங்கம்

தியாகதீபம் அன்னை பூபதியின் 6 ஆம் ஆண்டு நினைவாக 17 - 04 - 94 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி முதல் கொக்குவில் மாத்தனை சந்தைசாமி கோவில் முன்றலில் நல்லூர் பிரதேச வர்த்தகர்களினால் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. உணர்வு பூர்வமான இந்த உண்ணாவிரதத்தில் அனைத்து வர்த்தகர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

நல்லூர் பிரதேச
வர்த்தகர் சங்கம்

(சி/7777)

பிரிந்தோடப்பட்டுள்ளது

17 - 4 - 94 ஞாயிற்றுக்கிழமை இளைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறவிருந்த மிருதங்க கலைஞர் திரு T. பாக்கியநாதன் அவர்களுக்கான நிதி உதவிக் கலை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிரிந்தோடப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நடைபெறும் திகதி விரைவில் அறிவிக்கப்படும்.

இங்ஙனம்:
ஒழுங்கமைப்பாளர்கள்.

(சி/8010)

கண்ணீர் அஞ்சலி

பிறப்பு: 08 — 06 — 1972
அகால மரணம்: 14 — 04 — 1994

இம்மனுவேல் அன்ரன் மக்மிலன்

எமது திணைக்களத்தில் பணியாற்றிய இம்மனுவேல் அன்ரன் மக்மிலன் அவர்கள் 14-04-1994 இல் அகால மரணமான செய்திகேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும், கவலையும் அடைவதுடன், அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
வர்த்தகத் திணைக்களம்,
வடபிராந்தியம்.

48, வளவரிபாலன ஒழுங்கை,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (30432)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

வினா கானா விபூசனி அம்மா

வினா கானா விபூசனி அம்மா கடந்த புதன் கிழமை இரவு காலமாகிவிட்டார். இவர் காலஞ் சென்ற வீரபத்திர சுவாமி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ இ. சிவசாமிக்குருக்களின் அன்புத் துணைவியும் சாம்பு நாகேஸ்வரி அம்மா, செந்திநாதசர்மா, வாசுதேவக்குருக்கள் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை (14-04-94) பருத்தித்துறையில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. வாசுதேவக்குருக்கள்
(மகன்)

அல்வாய் வடக்கு,
அல்வாய். (30419)

நயினாதீவு

செல்வி நாகலிங்கம் இந்துமதி

(பிரதேச செயலர் / மேலதிக அரசாங்க அதிபர், கிளிநொச்சி - விசேட ஆணையாளர், பிரதேச சபை கிளிநொச்சி)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி நாகலிங்கம் இந்துமதி 14-4-94 இல் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சரவணமுத்து நாகம்மா தம்பதியினரதும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி. மயில்வாகனம், இராமலிங்கம் ஆகியோரது பெறாமகளும், பரமலிங்கம் (J. P.), காமாட்சியம்மா, சின்னம்மா காலஞ்சென்றவர்களான சீனிப்பிள்ளை, வள்ளியம்மை, ஆகியோரின் மருமகளும், நிவகவதி, நடராசா (ஓய்வுபெற்ற மேற்பார்வை உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்), சிவசக்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆறுமுகம் (பரிசோதகர், இ. போ. ச. கோண்டாவில்) குணபூஷணி, விக்கிவேஸ்வரன் (கனடா, முன்னாள் குபவாஹினி உதவிப் பணிப்பாளர் - தமிழ்ப்பிரிவு), குகதாசன் (இத்தாலி), மோகனதாசன் (நீர்கொழும்பு), கமலாதேவி (மாவலி அமைச்சு, கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நித்திலா (ஜேர்மனி), தற்பராநந்தா, முருகதாஸ் (மாணவர்கள் - பரியோவான் கல்லூரி), மாதங்கி, மதுரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், சுரநுதா, சோபிதா, மயூரன், நர்த்தனன், பிரணவன், யசோதரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16-4-94) சனிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகத் துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. ஆறுமுகம்
(மைத்துனர்)

25, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி. (30418)

கார்த்திப்பிள்ளை கனகசபை

(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

சாவகச்சேரியை சார்ந்த கார்த்திப்பிள்ளை கனகசபை (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) 15 - 04 - 94இல் காலமானார்.

அன்னார் கனகசபை வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலம் சென்ற ஞானச்சந்திரன் (முன்னாள் அரச அதிபர் முல்லைத்தீவு), பாலச்சந்திரன் (ஓய்வு பெற்ற அதிபர். டிங்பேக் கல்லூரி. சாவகச்சேரி, திருமதி யோகேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஓய்வு பெற்ற ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி), திருமதி புவனேஸ்வரி நாகராசா, காலஞ்சென்ற மனோச்சந்திரா (லண்டன்). பூரணச்சந்திரன் (பிராந்திய இயக்குநர் புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங் கொம்பனி), ஆகியோரின் தந்தையும், காலம் சென்ற பாலசுப்பிரமணியம் (பொறியியலாளர் மின்சார சபை), கலாநிதி நாகராசா (விவசாய ஆராய்ச்சியாளர் கண்டி), சறோஜினிதேவி, சாரதாதேவி, மணிமேனாதேவி, சோதிலக்சுமி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இலக்கம் 49 விதானையார் வீதி, சுண்டிக்குளி இல்லத்தில் இன்று (16 - 4 - 1994) சனிக்கிழமை மாலை 3 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
க. பாலசந்திரன் (மகன்)
க. பூரணச்சந்திரன் (மகன்)

இல. 49 விதானையார் வீதி,
சுண்டிக்குளி. (சி-30428)

திருமதி யோகராசா புவனேஸ்வரி

சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த திருமதி யோகராசா புவனேஸ்வரி கனடாவில் அகால மரணமார்.

அன்னார் யோகராசாவின் அன்பு மனைவியும், சூரியகலா (அனுஷா), வசந்தகுமார் காலஞ்சென்ற சுரேஸ்குமார் (கண்ணன், லெப் மெய்யப்பன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதபிள்ளை, குணரத்தினம், திருமதி சரஸ்வதி சிவயோகன், திருமதி யோகாம்பிகை செல்வராசா, ஆறுமுக வடிவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
திருமதி சரஸ்வதி சிவயோகன்
த. குணரத்தினம்

சுதுமலை வடக்கு,
மானிப்பாய் (7315)

தேவை

பெண் லிகிதர்

கோப்பாயில் இயங்கி வரும் "கெயின்ஸ்" கல்வி நிறுவனத்தில் பணி புரிவதற்கு பெண் லிகிதர் ஒருவர் தேவைப் படுகின்றார். 17 4-94 (ஞாயிறு) மாலை 3 மணிக்கு பணிபுரிய விரும்புவர்கள் மேற்படி கல்வி நிறுவனத்தில் நேரில் சமுகமளிக்கவும்.

- நிர்வாகி.

(சி/7773)

ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்காக

'ராசி சில்க்ஸ்'

ஆதரவில்

மின்னொளியில் மிளிரும்
உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி - 1994
3ஆவது இடத்திற்கான ஆட்டம்

இடம்: பரி. யோவான் கல்லூரி மைதானம்

காலம்:- **16 – 04 – 1994**
இரவு 7.15 மணி

சிறப்பு விருந்தினர்:
வைத்திய நிபுணர் எ. கணேசரட்ணம்
(அறுவைச் சிகிச்சைப் பிரிவு யாழ். போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)

பங்குபற்றும் அணிகள்:
- சென். மேரீஸ் வி. க. அணி எதிர்
- வதிரி டயமன்ஸ் வி. க. அணி

18 – 04 – 1994 இறுதி ஆட்டம் நடைபெறும்

- யாழ். பல்கலைக்கழக அணி எதிர்
- சென். தன்ரனிஸ் அணி

பிரவேசம்: ரூபா 25/-
சிறுவர்களுக்கு மட்டும் ரூபா 10/-

[சி-7703]

ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஏப். 16

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

இம்மாதம் 24 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். [அ-162)

★ ★ ★

வட்டுக்கோட்டை ஆடைக் கலந்தோட்டம் ஸ்ரீ கந்த சுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 25 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

தினமும் 10 நாட்களுக்கு பிற்பகல் 6-15 தொடக்கம் 7-15 மணி வரை "முருகன் பெருமை" பற்றி திருவாளர் சிவ மகாலிங்கம் தெய்வீகச் சொற்பொழிவாற்றுவார். (உ)

★ ★ ★

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய கொடியேற்றவைபவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருவிழா நடைபெற்று 25 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் தேர்த்திருவிழா நடைபெறும்; அன்று பிற்பகல் தீர்த்தோற்சவம் நடைபெறும். (ஓ-28)

★ ★ ★

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவிலில் ஸ்ரீசோமஸ்கந்தமூர்த்தி நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெறும்.

நூதனமூர்த்தி இன்றுகாலை 9 மணிக்கு மருதனார்மடம் சந்தியிலிருந்து ஊர்வலமாக ஆலயத்துக்கு எடுத்து வரப்படுவார். (அ-89)

★ ★ ★

சாவகச்சேரி பெருங்குளம் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகிறது (அ-31)

சண்டிலிப்பாய், சீரணி

அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்

வருடாந்த மஹோற்சவம்

கொடியேற்றம் — இன்று (16 04 94) சனிக்கிழமை காலை 11 மணி
ஸ்ரீ விநாயகர் புதிய சித்திரத்தேர் வெளிவோட்டம் — 22-04-94 வெள்ளி மாலை 3-30 மணி
இரதோற்சவம் — 25 04 94 திங்கள் காலை 9 மணி
தீர்த்தோற்சவம் — 25-04-94 திங்கள் மாலை 4 மணி
பூங்காவனம் — 27-04-94 புதன் மாலை 5 மணி

மஹோற்சவகால சிறப்புச் சொற்பொழிவு:
வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் M. A.
(திங்கள் மாலை 4 மணி)

(30430) — தர்மகர்த்தா சபை

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

96 புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
இன்று (சனி) காலை **8 00** மணி

பொருளியல் திரு. கலாகரன்	வர்த்தகம் திரு. தேவா	கணக்கியல் திரு SK.பிரபாகரன்
அளவையியல் திரு. விக்கி	புவியியல் திரு. குணராசா	தமிழ் திரு. கழுந்தை
இந்த நாகரிகம் சமயம் திரு. கரவை சுந்தரம்பிள்ளை	அரசியல் திரு. சீலன்	வரலாறு திரு. சிறீதரன்

- மாதாந்தம் பயிற்சிப் பரீட்சை நடத்தப்படும்
- 96 ஆண்டுக்கான Evening Class (4-00 — 6-00) ஆரம்பமாகிவிட்டன.
- எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவால் ஒருங்கிணைந்து சிறப்பாக நடத்தப்படும்.

[சி-8001]

கண்ணீர் அஞ்சலி

1994-04-14இல் இறைபதம் அடைந்த கரைச்சி பிரதேச செயலாளரும், விசேட ஆணையாளருமாகிய

செல்வி இந்துமதி நாகலிங்கம்

அவர்களின்

ஆத்மா சாந்தியடைய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருவடிகளை வேண்டுகிறோம்

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
கரைச்சி (கிளிநொச்சி).

[30426]

கண்ணீர் அஞ்சலி

செல்வி இந்துமதி நாகலிங்கம்

பிரதேச செயலாளர், விசேட ஆணையாளர்
கரைச்சி (கிளிநொச்சி)

1994 சித்திரை 14ஆம் நாள் இறைவனடி அடைந்த செல்வி இந்துமதிநாகலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்'

நலன்புரிச்சங்கம்,
மாவட்ட செயலகம் கிளிநொச்சி.

(30427)

மரண அறிவித்தல்கள்

திருமதி

சிவகாமிப்பிள்ளை விசுவலிங்கம்

(நயினாதீவு)

நயினாதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சிவகாமிப்பிள்ளை விசுவலிங்கம் நயினாதீவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அமிர்தாம்பாள், கந்தையா காலஞ்சென்ற சரவணமுத்து, சிவக்கொழுந்து, பத்மாவதி, ஏலாம்பரம், சாரதாமணி, கிருபாமணி(ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சதாசிவம், சறோஜினிதேவி, கனகேஸ்வரி (யா. ப. நோ. கூ. சங்க ஈச்சமோட்டைக் கிளை), தம்பியையா, அம்பலவாணர், முத்துலட்சுமி (வேலணை), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், மகாலிங்கசிவம் (ஜேர்மன்), ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை கனகரெட்னம் (தேவா ஸ்ரோர்ஸ், கொழும்பு), பொன்னம்பலம் (அஜந்தா ஹோட்டல், கொழும்பு), விசாலாட்சி, தையல்லம்மை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் புதன்கிழமை (13 - 4 - 94) அன்று நயினாதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
வி. ஏகாம்பரம் (மகன்)
திருமதி க. சரவணமுத்து (மருமகள்)

65, 3 ஆம், ஒழுங்கை,
ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம், (30463)

திருமதி இராசம்மா செல்லத்துரை

சுன்னாகம் வலியப்புலத்தை சேர்ந்த திருமதி இராசம்மா செல்லத்துரை 15-04-94 இல் சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் தா. செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் கேசரத்தினம் (முன்னாள் இ. போ. ச பரிசோதகர்), சிறிதரன் (பொறியியலாளர் முன்னாள் சீமெந்துக் கூட்டுத்தாபனம், தற்பொழுது தேசிய வீட்டமைப்புத் திணைக்களம்), திருமதி புனிதவதி ஜெகதீசன் டாக்டர்—மாவட்ட வைத்தியசாலை செங்கலடி), பாலசரன் (தொழில் நுட்பவியலாளர் ஈஸ்வரன் பிரதர்ஸ் கொழும்பு), ஆகியோரின் தாயாரும், லீலாவதி, அமுதா (ஆளணி உத்தியோகத்தர் லங்கா சீமெந்து லிமிட்டெட் கொழும்பு), காலஞ்சென்ற ஜெகதீசன் (பொறியியலாளர் கொழும்பு), மங்களா [உவநாட்டு இறைவரி திணைக்களம்கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற செல்லத்துரை [மனோசியா], காலஞ்சென்ற சின்னம்மா, சின்னத்துரை [ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்], நாரதநிலம் ஆகியோரின் சகோதரியும் வெண்பிரானி, துவாரகா, செந்திசிவபவன், கோபிகிருஷ்ணா ஆகியோரின் அன்புப் பேரத்தியுமாவார். ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:-
டாக்டர் புனிதவதி ஜெகதீசன்
[மகள்]

வரியப்புலம்,
சுன்னாகம். (7072)

பளிங்கு

தாவரவியல் A/L 96
திரு. V. S. குணசீலன் B. Sc special
ஆரம்பம்: 16 - 04 - 1994 பி. ப. 3 மணி
பிரதான வீதி,

விலங்கியல் A/L 96
திரு. A. ஈஸ்வரதாசன் B. Sc Dip in Edn.
ஆரம்பம்: 18 - 04 - 1994 காலை 10 மணி
சாவகச்சேரி.

(சி-7778)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 102/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 - 04 - 1994 இல் அச்சிடப் பெற்றது.